S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service), Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு” திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE புதன் டிசம்பர் 24 * 2025 * மலர் -1 * இதழ்-206* VOL-1 * ISSUE-206 விலை ரூ.3 * பக்கம் -4

## பொங்கல் பரிசுத் தொகுப்புடன்

# ரூ.3 ஆயிரம் ரொக்கம் வழங்க தமிழக அரசு பரிசீலனை!

சென்னை, டிச.24

பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3 ஆயிரம் ரொக்க பணம் வழங்க தமிழக அரசு பரிசீலனை செய்து வருகிறது.

இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் வாய்ப்பு உள்ளது.

தமிழர்களின் பாரம்பரிய பண்டிகையான பொங்கல் பண்டிகை தமிழ்நாட்டில் ஆண்டு தோறும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு வருகிற ஜனவரி 14–ஆம் தேதி பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட உள்ளது. இதற்காக இப்போதே மக்கள் தயாராகி வருகின்றனர்.

இதற்கிடையே ஆண்டு தோறும் பொங்கலுக்கு முன்னதாக தமிழக அரசு பச்சரிசி, சர்க்கரை, கரும்பு போன்ற அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பரிசுத் தொகுப்பை ரேஷன் அட்டைதாரர்களுக்கு வழங்கி வருகிறது. முன்பு ஒவ்வொரு அட்டைதாரர்களுக்கும் ரூ.1,000 ரொக்கப் பணமும் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் கடும் நிதி நெருக்கடி காரணமாக ரூ.1,000 ரொக்கம் 2025–ஆம் ஆண்டில் வழங்கப்படவில்லை. ஆனால் இந்த ஆண்டு மே மாதத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது.



எனவே தற்போது பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரொக்கம் வழங்க மாநில அரசு முடிவு செய்துள்ளதாக தெரிகிறது.

ஆண்டுதோறும் பொங்கல் தொகுப்புடன் ரூ.1,000 ரொக்கப்பணம் வழங்கப்பட்டு வந்த நிலையில் இந்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளதால் மக்களிடம் எதிர்ப்பார்ப்பு அதிகரித்துள்ளது.

எனவே தகுதி உள்ள ரேஷன் அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3,000 ரொக்கம் வழங்க தமிழக அரசு பரிசீலித்து வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாக உள்ளது. மேலும் ஜனவரி முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் பொங்கல் பரிசுத் தொகுப்பு விநியோகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைப்பார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.5,000 ரொக்கம் வழங்க வேண்டும் என தமிழக அரசை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் அரையாண்டுத் தேர்வு நிறைவு!
## இன்று முதல் பள்ளிகளுக்கு விடுமுறை!!

சென்னை, டிச.24

தமிழகத்தில் ஒன்று முதல் பிளஸ் 2 வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு அரையாண்டுத் தேர்வு இன்றுடன் நிறைவடைகிறது. அதைத்தொடர்ந்து நாளை (புதன்கிழமை) முதல் ஜன. 4 வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பள்ளிக் கல்வி பாடத்திட்டத்தைப் பின்பற்றும் அனைத்து வகை பள்ளிகளிலும் 1 முதல் பிளஸ் 2 வகுப்பு வரைபயிலும் மாணவர்களுக்கான அரை



யாண்டுத் தேர்வு கடந்த டிச. 10–ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகின்றன.

அனைத்து வகுப்புகளுக்கான தேர்வுகள் செவ்வாய்க்கிழமை நிறைவு பெறவுள்ளன. இதையடுத்து பள்ளிகளுக்கு டிச. 24 முதல் ஜன. 4 வரை அரையாண்டு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. விடுமுறை முடிந்து பள்ளிகள் மீண்டும் ஜன. 5–ஆம் தேதி திறக்கப்படவுள்ளன.



சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன் பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், நன்னிலம், மயிலாடுதுறை மற்றும் பூம்புகார் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட நிர்வாகிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனித் தனியாக சந்தித்து பேசினார். அப்போது நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.



சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு172, குருநானக் கல்லூரி அருகில் உள்ள வேளச்சேரி மயானபூமியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.6.85 கோடி மதிப்பீட்டில் நவீன மயானபூமி கட்டுமானப் பணியினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.நிகழ்ச்சியில், மண்டலக்குழுத் தலைவர் ஆர்.துரைராஜ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இருசக்கர வாகனங்கள் மோதல்:
## வேட்டைத்தடுப்புக்காவலர் உள்பட 2 பேர் உயிரிழப்பு!

பவானி,டிச.24–

ஈரோடு மாவட்டம், நெரிஞ்சிப்பேட்டையைச் சேர்ந்தவர் செந்தில்குமார்(40). மேட்டூரில் மின்சாதன விற்பனை கடை வைத்துள்ள இவர், தனது மனைவி அருணாவுடன் (33) குருவரெட்டியூர் வாரச்சந்தைக்கு சென்றுவிட்டு இரு சக்கர வாகனத்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். சேலம் மாவட்டம், பூலாம்பட்டி, ஆனைக்குழிக்காட்டைச் சேர்ந்தவர் தசரதன் (26). சென்னம்பட்டி வனச் சரகத்தில் வேட்டைத் தடுப்புக் காவலராகப் பணியாற்றி வந்த இவர், தனது நண்பரான ஜலகண்டாபுரம், சூரப்பள்ளியைச் சேர்ந்த சின்ன ஆனந்துடன் (36) சென்னப்பட்டிக்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். குருவரெட்டியூர் அம்மாபேட்டை சாலையில் சென்றபோது செந்தில்குமாரின் வாகனமும், தசரதனின் வாகனமும் நேருக்குநேர் மோதிக் கொண்டன. இதில், தலையில் காயமடைந்த செந்தில்குமார் சம்பவ இடத்திலும், பவானி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தசரதன் சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர். அந்தியூர் தனியார் மருத்துவமனையில் அருணாவும், ஈரோடு தனியார் மருத்துவமனையில் சின்ன ஆனந்தும் பலத்த காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுகுறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



மணலி மற்றும் மாதவரம் மண்டலம், வார்டு17 மற்றும் 23ல் புழல் உபரிநீர் கால்வாயின் குறுக்கே வடபெரும்பாக்கத்தில் ரூ.22.41 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட உயர்மட்ட பாலத்தினை பயன்பாட்டிற்குத் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்.





தூத்துக்குடியில் ஏழை பெண்களுக்கான திருமாங்கல்ய தங்கம் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. 195 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 89 லட்சத்து 15 ஆயிரம் மதிப்பிலான தங்க நாணயங்களை அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார். அருகில் சண்முகையா எம்.எல்.ஏ., மாவட்ட சமூக நல அலுவலர் பிரேமலதா ஆகியோர் உள்ளனர்.



கொடைக்கானல் வனக்கோட்டத்திற்குட்பட்ட பழனி வனச்சரகம் பெரியம்மாபட்டியில் ஒரு யானை இறந்து கிடந்தது. இது எப்படி இறந்தது என்பது குறித்து வனத்துறையினர் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

### அரூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட
## அ.தி.மு.க சார்பில் அபிநயாவிக்னேஷ் தம்பதியர் முன்னாள் அமைச்சர் வளர்மதியிடம் மனு!



தர்மபுரி,டிச.24

அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமி, கழக அமைப்பு செயலாளர் கே.பி. அன்பழகன் உள்ளிட்ட கட்சியினரின் ஆசியுடன் தொடர்ந்து பணியாற்றி வரும் இவர்கள், சாதி மறுப்பு திருமணம் செய்து சமூக ஒற்றுமையை வலியுறுத்தி வருவதாக மனுவில் கூறியுள்ளனர். அரூர் தொகுதி மக்களிடம் அ.தி.மு.கவின் கொள்கைகள் பரவலாக ஏற்பு காண்கிறது. தம்பதியர் பல்வேறு பகுதிகளில் கட்சித் தலைவர்களின் சாதனைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி, கழக அடித்தளத்தை வலுப்படுத்தி வருவதால் வாக்காளர் ஆதரவு பெருகி வருவதாக தெரிவித்துள்ளனர்.

இது அ.தி.மு.கவின் 2026 தேர்தல் வெற்றிக்கு நல்ல அடையாளமாக மாறியுள்ளது. விக்னேஷ் வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவராவார், அபிநயா ஆதிதிராவிடர் சமூகத்தைச் சேர்ந்தவராவார்.

இரு சமூகங்களின் ஒத்துழைப்புடன் அரூர் தொகுதியில் உறுதியான வெற்றி பெறுவோம் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கட்சியின் உறுப்பினர்களாக தொடர்ந்து பணியாற்றி வருவதாகவும் மனுவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அரூர் தொகுதியில் அ.தி.மு.க சார்பில் வேட்பாளராக நிறுத்தப்பட வாய்ப்பு வழங்குமாறு வளர்மதியிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

இது போன்ற விருப்ப மனுக்கள் 2026 தேர்தலுக்கு கட்சியில் ஆர்வத்தை பிரதிபலிக்கிறது.தர்மபுரி மாவட்டம் அரூர் சட்டமன்றத் தொகுதியில், 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க சார்பில் பொதுவேட்பாளராக போட்டியிட விருப்பம் தெரிவித்து,

விக்னேஷ் வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவராவார், அபிநயா ஆதிதிராவிடர் சமூகத்தைச் சேர்ந்தவராவார்.

இரு சமூகங்களின் ஒத்துழைப்புடன் அரூர் தொகுதியில் உறுதியான வெற்றி பெறுவோம் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர். கட்சியின் உறுப்பினர்களாக தொடர்ந்து பணியாற்றி வருவதாகவும் மனுவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### சிவகாசியில் சம்பவம்:
# மனைவி, 2 குழந்தைகள், மாமியாருக்கு தீ வைப்பு!

சிவகாசி,டிச.24–

சிவகாசி பெரிய பள்ளிவாசல் முஸ்லிம் ஓடைத் தெருவில் வசிப்பவர் அக்பர்அலி (55). ஓட்டுனராக உள்ளார். இவர் ஏற்கனவே கணவனை இழந்த செய்து அலி பாத்திமா (35) என்பவரை கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு 2–வதாக திருமணம் செய்து கொண்டார்.

செய்யது அலி பாத்திமாவின் முதல் கணவர் முபாரக்அலி கடந்த சில வருடங்களுக்கு முன்பு விபத்தில் உயிரிழந்த நிலையில், இவர்களிருவருக்கும் பர்வீன் பானு (18 ) என்ற மகளும், செய்யது பாருக் வயது 16 ) என்ற மகனும் உள்ளனர். பர்வீன் பானு 11ம் வகுப்பும், செய்யது பாருக்10ம் வகுப்பும் படித்து வருகின்றனர்.

ஏற்கனவே செய்யது அலி பாத்திமாவிடம் அவ்வப்போது பணம் கேட்டு தொந்தரவு செய்த அக்பர் அலி அவர் மீது சந்தேகப்பட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது. இதனால் ஏற்பட்ட தகராறில் அக்பர் அலி, செய்யது அலி பாத்திமாவை அரிவாளால் வெட்டி காயப்படுத்திய வழக்கில் சிவகாசி நகர் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டு கைதான அக்பர்அலி கடந்த சில நாட்களுக்கு முன்புதான் ஜாமினில் வெளிவந்துள்ளார். இதற்கிடையே செய்யது அலி பாத்திமாவின் முதல் கணவர் முபாரக்அலி விபத்தில் இறந்த நிவாரணத் தொகை 11 லட்சம் வருவது குறித்து தகவலறிந்த அக்பர்அலி அந்தப் பணம் வந்தவுடன் அதனை தன்னிடம் தான் தர வேண்டும் எனக் கேட்டு தகராறு செய்துள்ளார்.

இதில் ஆத்திரமடைந்த அக்பர்அலி பெட்ரோல் கலந்த மண்ணெண்ணெய் யை எடுத்துக்கொண்டு வீட்டினுள் நுழைந்து வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த செய்யது அலி பாத்திமா அவரது தாயார் சிக்கந்தர் பிவி (60), மகள் பர்வீன் பானு, மகன் செய்யது பாருக் ஆகியோர் மீது ஊற்றி தீ வைத்துள்ளார். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சிவகாசி தீயணைப்புத்துறை மற்றும் காவல்துறையினர் சென்று மீட்பு பணியில் ஈடுபட்டு படு காயமடைந்த அனைவரையும் சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். இதில் அக்பர்அலிக்கும் காய மேற்பட்டு சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரை போலீசார் கைது செய்தனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளிக்காட்சிவாயிலாகவிழுப்புரம்மாவட்டம்காணைஒன்றியம்கெடார்ஊராட்சியில் விழுப்புரம் மாவட்ட அரசு மாதிரி பள்ளியின் புதிய கட்டடத்தினை திறந்து வைத்ததை தொடர்ந்து, விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர்அன்னியூர் அ.சிவா குத்துவிளக்கேற்றி மாணவ, மாணவிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். உடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, உட்பட பலர் உள்ளனர்.



கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம் திருச்சி சாலை, சுங்கம் ரவுண்டானா பகுதியில் சூயஸ் நிறுவனத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் 24 மணி நேர குடிநீர் திட்டத்தின் கீழ், போக்குவரத்திற்கு இடையூறு இன்றி பிரதான குழாய்கள் அமைப்பது தொடர்பாகமாநகராட்சிஆணையாளர்மா.சிவகுருபிரபாகரன்,நேரில்சென்றுபார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் தலைமைப் பொறியாளர்விஜயகுமார், உதவி செயற்பொறியாளர்கள்முருகேசன்,எழில், உதவி பொறியாளர்கள்சதீஷ்குமார்,குமார், உத்தமன்,ஜெயின்ராஜ்,சக்திவேல்,பிரகதீஸ்வரன், சூயஸ் நிறுவன அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.



இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாத புதிய வாக்காளர்கள் மற்றும் 01.01.2026 மை நாளாக கொண்டு 18 வயது பூர்த்தியடைந்தவர்களுக்கான சிறப்பு முகாம்கள் அனைத்து வாக்குச்சாவடிமையங்களிலும்நடைபெற்றது.இதன்ஒருபகுதியாக,வி.க.நகர்சட்டமன்றத் தொகுதி, பெரம்பூர் நெடுஞ்சாலையில் உள்ள எவர்வின் வித்யாஷ்ரம் மேல்நிலைப் பள்ளியில் சிறப்பு முகாம் நடைபெற்றது.



## சோமலாபுரம் பகுதியில்

## மின்னழுத்த மின்கம்பிகள் ஒரே கம்பத்தில் இணைந்திருப்பதால் ஒருவர் உயிரிழப்பு; கலெக்டர் அலுவலகத்தில் மனு!

### கலெக்டர் இல்லாததால் அலட்சியமான பதில் கூறுகிறார்கள் என வேதனை!!

**திருப்பத்தூர் டிச.24**

சோமலாபுரம் கிராமத்தில் உள்ள SS–1 டிரான்ஸ்பார்மில் இருந்து வரும் உயர் மின்னழுத்த மின்சார வழித்தடம், அங்குள்ள தனியார் தொழிற்சாலைக்கு செல்கிறது. இந்த உயர் மின்னழுத்த மின்கம்பிகள், குறைந்த மின்னழுத்த மின்கம்பிகளுடன் ஒரே மின் கம்பத்தில், மிகக் குறைந்த இடைவெளியில் பொருத்தப்பட்டுள்ளதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மேலும் இப்பகுதிகளில் குடியிருப்பு வீடுகள், கடைகள், நியாய விலை கடை, கோயில் மற்றும் பஞ்சாயத்து தொடக்கப் பள்ளி ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இவ்விடங்களுக்கான மின்சாரஇணைப்புகள் அனைத்தும், இதே குறைந்த மின்னழுத்த மின்கம்பிகளிலிருந்தே வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.குறைந்த மின்னழுத்த மின்கம்பிகளில் கோளாறு ஏற்பட்டால், அதை சரி செய்வதற்காக ஒவ்வொரு முறையும் உயர் மின்னழுத்த மின்சார வழித்தடத்தை துண்டிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை உருவாகிறது. ஆனால், சோமலாபுரம் கிராமத்தில் உயர் மின்னழுத்த மின்சாரத்தை தனியாக துண்டிக்கும் எந்தவித வசதியும் மின்சாரத் துறையால் ஏற்படுத்தப்படவில்லை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், இந்த உயர் மின்னழுத்த மின்கம்பிகள் பொருத்தும் பணிகள் நடைபெற்ற போது, ஊர் பொதுமக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்த போதிலும், அதை மீறி சுமார் நான்கு மாதங்களாக மின்சாரத் துறை ஊழியர்கள் இந்த பணிகளை மேற்கொண்டதாகவும் கூறப்படுகிறது. கடந்த வெள்ளிக்கிழமை, பொதுமக்களுக்கு எந்தவித முன்னறிவிப்பும் இன்றி, அபாய எச்சரிக்கை பலகைகள் கூட.பொருத்தப்படாமல்மின்சாரம் வழங்கப்பட்டதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.பின்பு இதன் விளைவாக, 13.12.2025 அன்று சோமலாபுரம் கிராமத்தைச் சேர்ந்த ஜான் போஸ்கோ என்பவர், உயர் மின்னழுத்த மின்சாரம் குறித்து அறியாமல் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்ததாக மனுவில் குறிப்பிட ப்பட்டுள்ளது. இந்த சம்பவம், கிராம மக்களிடையே பெரும் சோகத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மேலும் மாவட்ட ஆட்சியர் இன்று வராததால் துறை சார்ந்த அதிகாரிகளிடம் மனு அளித்த போது அவர்கள் நீங்கள் போய் ஏடியிடம் மனு வழங்கும் என அலட்சியமாக பதில் சொல்லியதால் சோமலாபுரம் பொதுமக்களும் இறந்து போன குடும்பத்தினரும் வேதனை தெரிவித்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## நெல்லிக்குப்பத்தில் நெடுஞ்சாலை துறையை கண்டித்து கடை அடைப்பு போராட்டம்!

### நகர அனைத்து தொழில் வர்த்தக சங்கத்தினர் அறிவிப்பு!!



**கடலூர் டிச.24**

கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் தமிழ்நாடு வணிகர் சங்க பேரவையின் நகர அனைத்து தொழில் வர்த்தக சங்கத்தின் 14 ஆம் ஆண்டு துவக்க விழா மற்றும் பொதுக்குழு கூட்டம் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது இந்த கூட்டத்தில் நெடுஞ்சாலைதுறை கண்டித்து ஆர்ப்பாட்டம் மற்றும் கடையடைப்பு போராட்டம் நடைபெறும் என அறிவித்தனர்

இந்நிகழ்ச்சியில் நகர அனைத்து தொழில் வர்த்தக சங்கத்தின் நகர தலைவர் வி.எம்.ஷேக்தாவூத் தலைமையேற்றி கூட்டத்தை நடத்தி வைத்தார்

ஆண்டறிக்கை துவக்க உரையை நகர செயலாளர் ஜெ.ராமலிங்கம் வாசித்தார் நகர பொருளாளர் ஆசாத் ஒருங்கிணைப்பாளர் கருணா (எ) தன்ராஜ் சட்ட ஆலோசகர் ராம்சிங் சிறப்பு அழைப்பாளராக நெல்லிக்குப்பம் நகர மன்ற தலைவர் ஜெயந்தி ராதாகிருஷ்ணன் வணிகர் சங்கங்களில் பேரமைப்பு மண்டல தலைவர் சண்முகம் சிறப்புரையாற்றினார்

விழாவில் பல்வேறு தீர்மானங்கள் கொண்டு வந்தனர் அதில் நெல்லிக்குப்பத்தில் நெடுஞ்சாலையில் இருபுறமும் அமைந்துள்ள ஒளிவிளக்குகள் எந்த பகுதியில் எரியவில்லை அதை கண்டித்து ஆர்ப்பாட்டம் மற்றும் கடையடைப்பு போராட்டம் நடைபெறும் என சங்கம் அறிவித்துள்ளது நெல்லிக்குப்பம் நகரத்தை தலைமை இடமாக கொண்டு தனி தாலுகா அமைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்னை திருச்சி சென்றுவர நேரடியா பேருந்து வசதி கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் இருந்ததை போல மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நமது நகரத்தில் ஒரு கலை கல்லூரியை ஏற்படுத்தித் தர பள்ளிக் கல்வித் துறையை கேட்டுக்கொள்கிறது .

இதுபோன்ற பல்வேறு தீர்மானங்களை கொண்டு வந்தனர் இந்நிகழ்ச்சியில் சங்க தணிகையாளர் கணி. கௌரவ தலைவர் சம்சுதீன் மாவட்ட இணை செயலாளர் சுரேஷ் செயல் தலைவர் ராஜேந்திர குமார். நகர துணை தலைவர் முனவர் அலி நிர்வாக ஆலோசகர் அமரநாதன் முஹம்மது அபுசலிஹ் உள்ளிட்டார் ஏராளமான கலந்து கொண்டனர்

## களத்திற்கு வராதவர்களை அப்புறப்படுத்த வேண்டும்; அமைச்சர் கீதாஜீவன் பேச்சு!




**தூத்துக்குடி டிச.24**

தூத்துக்குடி தமிழக முதலமைச்சரும் திமுக தலைவருமான ஸ்டாலின் உத்தரவின்படி தமிழக முழுவதும் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற மக்களின் சந்திப்பு நிகழ்ச்சி சென்னையில் தொடங்கி வைத்ததை யொட்டி தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி 34வது வார்டில் 42வது பாகத்தில் வாக்குசாவடி முகவா்களுடன் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிா் உாிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் ஆய்வு மேற்கொண்டு வாா்டுக்குட்பட்ட அனைத்து வாக்காளா்கள் பெயரும் பட்டியலில் முழுமையாக இடம் பெற வேண்டும்.

வரைவு வாக்காளா் பட்டியல் வெளியிட்டப்பட்டுள்ளது. விடியல் பயணம் மகளிர் உரிமைத் தொகை இரண்டாவது கட்டமாக தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் துவக்கி வைத்துள்ளா்.

விடுபட்ட மகளிர்க்கு ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகை தகுதியான அனைவருக்கும் வழங்கப்பட்டு வருகிறது. கல்லூாி மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை இரண்டு கப்பல் கட்டுதளம் தூத்துக்குடியில் வருகிறது ஒன்று அரசு சார்பிலும் மற்றொன்று தனியார் சார்பிலும் அமைக்கப்பட உள்ளது அதன் சார்பில் வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் அதே போல் வின்பாஸ்ட் காா் தொழிற்சாலை தொடங்கப்பட்டு வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. எஸ்ஐஆர் பட்டியல் உங்களிடம் உள்ளது அதன் அடிப்படையில் வீட்டுக்கு வீடு மக்களை நாம் சந்திக்க வேண்டும் என்று அமைச்சர் கீதாஜீவன் கூறினார்.

மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், பகுதி செயலாளா் ரவீந்திரன், வட்டச்செயலாளர் சுரேஷ், கவுன்சிலா் ராமா், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் சங்கரநாராயணன், அவைத்தலைவர் ஆனந்தன், வட்ட துணைச்செயலாளர்கள் அன்னலட்சுமி, மாாிமுத்து, முன்னாள் அறங்காவலா் குழு தலைவர் செந்தில்குமாா், வட்டப்பிரதிநிதிகள் பாஸ்கா், தாமரைலிங்கம், ஜெயராமன், மற்றும் மணி அல்பட் பாகமுகவா்கள் உள்பட பலா் கலந்து கொண்டனா்.



திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் இரா.சுகுமார், மாற்றுத்திறனாளிகளின் இருப்பிடத்திற்குச் சென்று கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.


...விரைவில்...
உங்கள் உள்ளாட்சி அரசு நாளிதழ்...
அறிவே ஆன்மீகம் ஜோதிட செய்திகள்.....
வாழ்விலும், தொழிலிலும் உள்ள அனைத்து பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு வாழ்வில் நிரந்தர தீர்வு காண, "வாழ்வில் வெற்றி பெற்று", "வாழ்வில் மகிழ்ச்சியுடன் வாழ" வழிகாட்டுகின்றார்.
40 ஆண்டுகள் ஆன்மீகம் மற்றும் ஜோதிட பணிகளை செய்து வரும்...
சிவத்திரு. சிவமணி சுவாமிகள்
96593 20245 - 98426 79941
உள்ளாட்சி அரசு நாளிதழ்




ராஜபாளையம் அருகே தேவதானம் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் தென்னை, மா, வாழை மற்றும் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டு இருந்ததை ஒற்றை காட்டு யானை சேதப்படுத்தியது . இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதுகுறித்து வனத்துறைக்கு புகார் அளித்தாலும், யானையை விரட்ட நடவடிக்கை எடுப்பதில்லை, முறையாக ரோந்து செல்வதும் இல்லை. ஒற்றை காட்டு யானையை அடர் வனப் பகுதிக்குள் விரட்ட வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர்.

## பள்ளியில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டம்!



**சிதம்பரம், டிச.24**

சிதம்பரம் சி. வக்காரமாரியில் உள்ள வீனஸ் சிபிஎஸ்இ பள்ளியில் கிருஸ்துமஸ் விழா பள்ளியின் சேர்மன் S. குமார், இயக்குனர் டாக்டர் K. முரளி குமார், முதல்வர் S, ராதிகா, மேலாளர் K ராமதாஸ் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள கிருஸ்தவ கலாச்சார குடில், கிருஸ்துமஸ் மரம் ஒளிரும் இடத்தில் மெழுகுவர்த்தி ஏற்றி மாணவர்களுக்கு கிருஸ்து பிறப்பின் பெருமைகளையும், வரலாற்று கலாச்சார நிகழ்வுகளையும் சேர்மன் S. குமார் எடுத்துரைத்தார்.

சாண்டாக்ளாஸ் வேடமணிந்து மாணவர்களுக்கு பரிசுப் பொருட்கள் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

## பாரம்பரிய அழகும் உயர் செயல்திறனும் இணையும் பஜாஜ் புனே கிராண்ட் டூர் 2026 டிரோபி – சென்னையில் வெளியீடு!

**சென்னை டிச.24**




பாரம்பரிய அழகையும் உயர் செயல்திறனையும் ஒருங்கிணைக்கும் பஜாஜ் புனே கிராண்ட் டூர் 2026 டிரோபி, அதன் நாடு முழுவதுமான டிரோபி சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக 22 டிசம்பர் 2025 அன்று சென்னையில் வெளியிடப்பட்டது. இந்தியாவின் முதல் UCI 2.2 தரவரிசை பெற்ற சர்வதேச சாலை மிதிவண்டிப் போட்டிக்கான இந்த டிரோபி வெளியீடு, தொழில்முறை சைக்கிளிங் துறையில் இந்தியாவின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தையும், உலகத் தரத்திலான விளையாட்டு நிகழ்வுகளை நடத்தும் நாட்டின் திறனையும் வெளிப்படுத்துகிறது.

இதுகுறித்து பஜாஜ் புனே கிராண்ட் டூர் – ரேஸ் தொழில்நுட்ப இயக்குநர் பினாகி பைசாக் கூறுகையில், "புனே கிராண்ட் டூர் 2026 மூலம் இந்தியாவிற்கு சர்வதேச சாலை சைக்கிளிங் துறையில் வலுவான தொடக்கத்தை உருவாக்குவதே எங்கள் நோக்கம். UCI 2.2 வகைப்படுத்தல் இந்த பயணத்தின் ஆரம்பமாகும்; உலக தரத்துடன் இணைந்து இந்த போட்டியை தொழில்முறை நிலைக்கு உயர்த்த நீண்டகால திட்டம் உள்ளது. சென்னை போன்ற நகரங்கள் ஒழுக்கம், சகிப்புத்தன்மை மற்றும் விளையாட்டு பண்பாட்டை வளர்த்து, இந்திய விளையாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன" என்று தெரிவித்தார்.

## இந்த குளிர்காலத்தில் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்குத் தயாராகும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ்!

**சென்னை டிச.24**



இந்த குளிர்கால சுற்றுலா பருவத்தில் இந்தியப் பயணிகளை வரவேற்க ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் முழுமையாக தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது. ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் வணிகத் தலைவர் திமுது தென்னகூன் கூறுகையில், "டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்கள் ஸ்ரீலங்காவைச் சுற்றிப்பார்க்க மிகச் சிறந்த காலகட்டம். கடற்கரை விடுமுறைகள், கலாச்சார முக்கோணம் மற்றும் மிரிஸ்ஸாவில் நீலத் திமிங்கல பார்வை போன்ற அனுபவங்களுக்கு இது உகந்த பருவம். குறுகிய அல்லது நீண்ட பயணமாக இருந்தாலும், பயணிகளை ஆதரிக்க எங்கள் குழுக்கள் முழுமையாக தயாராக உள்ளன" என்றார். இதனுடன், இலங்கை ஹோட்டல் சங்கத் தலைவர் அசோக ஹெட்டிகொடா கூறுகையில், "இந்தியாவிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை இலங்கை தனது இயல்பான அன்பும் உற்ற வரவேற்பும் நிறைந்த சேவையுடன் தொடர்ந்து வரவேற்கிறது. மரவிளா முதல் பாசிக்குடா வரை கடற்கரை ஹோட்டல்கள், கொழும்பு, கண்டி, கலாச்சார முக்கோணம் மற்றும் நுவரெலியா ஆகிய பகுதிகளில் உள்ள தங்குமிடங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன" என்று தெரிவித்தார்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி ஒன்றியம், அம்பலூர் ஊராட்சியில், ஊராட்சி பொது நிதி ரூபாய் 8,61,000 மதிப்பீட்டில் பல் நோக்கு கட்டிடம் கட்டும் பணியை ஊராட்சி மன்ற தலைவர் ஏ.பி.முருகேசன் பூமி பூஜை செய்து பணியை துவக்கி வைத்தார். இதில் துணைத்தலைவர் நர்மதா நந்தகோபால், வார்டு உறுப்பினர் கள், ஊராட்சி செயலாளர், ஊர் முக்கியஸ்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



அலங்காநல்லூர் பேரூராட்சி குறவன்குளம் கிழக்கு மந்தை திடலில் அமைந்துள்ள ராஜவம்ச சாம்பவர் குல பெருமக்கள் உறவின்முறைக்கு தனித்து பாத்தியப்பட்ட ஸ்ரீராஜ காளியம்மன் கோவில் 48 வது நாள் மண்டல பூஜை விழா நடைபெற்றது. சிறப்பு யாகசாலை 16 வகை சிறப்பு ஹோமங்கள் அதனை தொடர்ந்து சுவாமிக்கு பல்வேறு அபிஷேகங்கள் நடைபெற்று. பின்னர் மகா பூர்ணாகிதி தீபாராதனை தொடர்ந்து புனித நீர் ஊற்றப்பட்டு மண்டல அபிஷேக விழா நடைபெற்றது. திருக்கோயிலுக்கு வருகை தந்த பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை ஸ்ரீராஜகாளியம்மன் திருக்கோவில் நிர்வாக குழுவினர் செய்திருந்தனர்.



## ஆலாங்குப்பம் கிராமத்தில் கிருஸ்துமஸ், புத்தாண்டையையொட்டி இரட்டையர் கேரம் போட்டி!

### விளையாட்டு வீரர்கள் பங்கேற்பு!!

ஆம்பூர் டிச.24

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த ஆலாங்குப்பம்கிராமத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் கடந்த (20 மற்றும் 21) ஆகிய இரு தினங்களில், ஆலாங்குப்பம் கிராமத்தை சேர்ந்த கதிர வன்கேம்ஸ்கிளப்சார்பில், 2 ஆம் ஆண்டு கிருஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு விழா வையொட்டி, இரட்டையர், கேரம் போட்டி (பேஸ் கேம்) நடைப்பெற்றது, இதில் உள்ளூர் மட்டுமில்லாது, கர்நாடக மாநிலம், பெங்களூர், கே.ஜி.எப் உள் ளிட்ட பல்வேறு பகுதியை சேர்ந்த ஏராள மான கேரம் போர்டு விளையாட்டு வீரர் கள், பங்கேற்றனர், முதல் போட்டியை, மாதனூர் அதிமுக மேற்கு ஒன்றிய செய லாளர், வெங்கடேசன், துவக்கி வைத் தார், அதனை தொடர்ந்து, ஞாயிற்றுக்கி ழமை நடைப்பெற்ற அரையிறுதி போட்டியை திருப்பத்தூர், திமுக மாவட்ட மாணவரணி அமைப்பாளர், பிர பாகரன், தலைமை செயற்குழு உறுப்பி னர் சாமுவேல் செல்லபாண்டியன், மாத னூர்திமுககிழக்குஒன்றியபொறுப்பாளர், ராமமூர்த்தி, ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஜோதி வேலு, கோமதி வேலு, ஆகியோர் துவக்கி வைத்தனர்,

அதனை இரண்டு தினங்கள் நடைப் பெற்ற இந்த போட்டியில் முதல் பரிசான, 25000 ரூபாய் மற்றும் கோப்பையை, பெங்களூரு அணியை சேர்ந்த திலீப் சாரதி பார்ட்னர்ஸூம், இரண்டாம் பரி சான 20000 மற்றும் கோப்பையை ஆலாங்குப்பம் கதிரவன் கேம்ஸ் கிளப் அணியை சேர்ந்த தேவ பிரசாத் மணி பார்ட்னர்ஸூம், மூன்றாம் பரிசான, 15000 ஆயிரம் மற்றும் கோப்பையை, வேலூர் மஸ்தான் காதர் பார்ட்னர்ஸூம்,, 4ஆம் பரிசான 10000 ரூபாயை வேலூர் ரியாஸ் அக்பர் பார்ட்னர்ஸூம், , 5ஆம் பரிசான 7000 ரூபாயை, ஆம்பூர் எஸ்.பி.அகாடமி சேர்ந்த பிரசாத் பைசல் பார்ட்னர்ஸூம்,, 6 ஆம் பரிசான 5000 ரூபாயை சான்றோர் குப்பம் சசி கோபி பார்ட்னர்ஸூம், 7ஆம் பரிசான 3000 ரூபாயை கதிரவன் கேம்ஸ் கிளப் அணியை சேர்ந்த பிரேம் கோகுல் பார்ட்னர்ஸூம் வெற்றி பெற்றனர். மேலும் இருதினங்கள் நடைப்பெற்ற இந்த கேரம் போட்டியில் பங்கேற்றவர்க ளுக்கு, கதிரவன் கேம்ஸ் கிளப் சார்பாக உணவுகள் வழங்கப்பட்டது, மேலும் இந்த போட்டியை சுற்றுவட்டார பகு தியை சேர்ந்த ஏராளமான இளைஞர்கள் மற்றும், பொதுமக்கள் கண்டு ரசித்தனர்.



## தூத்துக்குடியில் காங்கிரஸ் சார்பில் முப்பெரும் விழா!

தூத்துக்குடி டிச.24

தூத்துக்குடி அகில இந்திய காங்கிரஸ் ஒர்க்கர்ஸ் கமிட்டி மாவட்ட தலைவர் ஜெயக்கொடி பிறந்தநாள் விழா தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதி மகிளா காங்கிரஸ் பொறுப்பாளர் உமா மகேஸ்வரிக்கு பாராட்டு விழா மற்றும் 2026 ஆண்டு காங் கிரஸ் தொண்டர்களுக்கு காலண்டர் வழங் கும் விழா தனியார் மஹாலில் நடைபெற் றது. விழாவிற்கு தமிழ்நாடு மாநில ஐஎன்டியூசி பொதுச் செயலாளர் பெருமாள் சாமி தலைமை வகித்தார். வர்த்தக காங்கி ரஸ் மாவட்ட தலைவர் வக்கீல் டேவிட் பிரபாகரன் பழங்குடியினர் பிரிவு மாநில செயலாளர் முனியசாமி மாவட்ட காங்கி ரஸ் பொதுச்செயலாளர் இக்னேஷியஸ் ஆராய்ச்சித்துறை மாவட்ட தலைவர் சிவ ராஜ் மோகன் ஆகியோர் முன்னிலை வகித் தனர். முன்னாள் எஸ்டி எஸ்சி பிரிவு மாவட்டத் தலைவர் ராஜாராம் வரவேற்பு ரையாற்றினார். பெருமாள்சாமி பேசுகை யில் தலைமையில் உத்தரவிற்கிணங்க அனைவரும் கட்சி பணியை சிறப்பாக செய்து எதிர்வரும் காலங்களில் சோனியா காந்தி ராகுல்காந்தி கரத்தை தமிழக தலை வர் செல்வம் பெருந்தகை வழியில் நிறை வேற்றுவதற்குஅனைவரும்முழுமனதோடு பணியாற்ற வேண்டும் என்று பேசினார்.

விழாவில் விவசாய பிரிவு பேரையா, ரூஸ்வெல்ட் சுந்தர், சுரேஷ்குமார், முரு கேசன், வழக்கறிஞர் செல்வம், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கண்மாயில் இறைச்சி கழிவுகள் செப்டிக் டேங்க் கழிவு நீர்; 4 ஊராட்சிகளுக்கு குடிநீர் ஆதாரம் பாதிப்பு!

சிவகாசி, டிச.24

"சிவகாசி அருகே சித் துராஜபுரத்தில் இருந்து 2.4.. ரெட்டியபட்டிசெல்லும்வழியில்ஆனையூர்வருவாய்க்கு உட்பட்ட கண்மாய் உள்ளது. இந்தக் கண்மாய் சித்துராஜபுரம்,

பூலாவூரணி, கொங்கலா ஊராட்சிகளுக்கு , குடிநீர் ஆதாரமாக பயன் ஆகிய 4 பட்டு வருகிறது. இதற் காக கண்மாயில் 15 ஆழ் துளை கிணறுகள், ஆறு அமைக்கப் கிணறுகள் பட்டுள்ளது.

இந்நிலையில் கண்மா யில் குப்பை, இறைச்சி கழிவுகள் கொட்டப்ப டுகிறது. மேலும் இரவு நேரத்தில் வாகனத்தில் கொண்டு வந்து செப்டிக் டேங்க் கழிவு நீரையும் இதில் கொட்டுகின்றனர்.

இதனால் கண்மாயில் பாதிக்கப்படுகிறது. கண் மாய் தண்ணீரில் துர்நாற் றம் ஏற்படுகிறது. இங்கி ருந்து கிடைக்கும் தண்ணீர் சுகாதாரமற்றதாக வருகின் றது. இதனை மக்கள் பயன் படுத்துவதால் பல்வேறு தொற்று நோய்களுக்கு ஆளாகின்றனர்.

எனவே கண்மாயில் இறைச்சி கழிவுகள், செப் டிக் டேங்க் கழிவு நீர் கொட்டுவதை மக்கள் வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

## ஊராட்சிகளில் தாமிரபரணி குடிநீர் வினியோகம் செய்ய மக்கள் எதிர்பார்ப்பு!

சிவகாசி, டிச. 24

சிவகாசி ஒன்றியத்தில் ஊராட்சிகளில் தாமிர பரணி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் முழுமையாக வினியோ கம் செய்யாததால் மக் கள் அவதிப்படுகின்ற னர். சீரான குடிநீர் வினியோகம் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். சிவகாசி ஒன்றியத்தில் 54 ஊராட் சிகள் உள்ளன. அனைத்து ஊராட்சிகளுக் கும் குடிநீர் வினியோகம் செய்வதற்காக 2019 ல் தாமிரபரணி கூட் டுக் குடி நீர் திட்டம் துவங்கப்பட் டது. இத்திட்டத்தின் படி ஊராட்சிகளில் மேல்நிலை குடிநீர் தொட்டி கட்டப் பட்டு குழாய் இணைப்பு கொடுக்கப்பட்டு குடி

நீர் வினியோகம் செய்ய வேண்டும். ஆனால் கூட்டு குடிநீர்திட்டப்பணிகள் ஓர ளவிற்கு முடிந்த நிலையில் கிராமங்களில் குடிநீர் வினி யோகம் முழுமையாக இல்லை. ஊராட்சி களில் தற்போது வரையி லும் மேல் நிலை குடிநீர் தொட்டி கட்டும்பணி கிடப்பில் போடப் பட்டுள் சில ஒரு ளது. ஒரு சில ஊராட்சி ளது. ஒரு களில் தொட்டி கட்டப்பட் டும் குடிநீர் ஏற்றவில்லை. மேலும் ஒன்றியத்தில் ஒரு ஊராட்சியில் 30 மேல் நிலை குடிநீர் தொட்டிகள் இருந்தால் அங்கு 5 முதல் 8 தொட்டிகளுக்கு மட்டுமே குடிநீர் ஏற்றப்படுகிறது.

மற்ற உள்ளூர் தொட்டிகளில் போர்வெல் எனவே மூலம் மட்டுமே தண்ணீர் ஏற்றப்படுகிறது. இதனால் கிராம மக்கள் குடிநீர் பற் றாக்குறையால் அவதிப் படு கின்றனர். கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் அனைத்து ஊராட்சிக ளிலும் அனைத்து தொட் டிகளுக்கும், குடிநீர் ஏற்றப் பட்டு வினியோகம் செய்ய வேண்டும் என மக் கள் எதிர்பார்க்கின்றனர்.



ராணிப்பேட்டை முத்துக்கடையருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் ராணிப்பேட்டை வழக்கறிஞர் . ஜெயக்குமார் தலைமையில் நேற்று நடந்த மாவட்ட வழக்கறிஞர்கள் சங்க கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்நாடு,புதுச்சேரிமாநிலங்களின்பார்கவுன்சில்தலைவர் அமுல்ராஜை சந்தித்த காட்பாடி,வேலூரைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் கனகராஜ், பிரபு, ராஜ்குமார், கார்த்திகேயன் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்

## கோபி அருகே தீக்குளித்து பெண் தற்கொலை!

கோபி, டிச.24

கோபியை அடுத்த பொம்மநாய்க்கன்பாளை யம், காமராஜ் நகரைச் சேர்ந்தவர்சுரேஷ்(34). கட் டிட கூலி தொழிலாளி. இவரது மனைவி ரம்யா(32). இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர். ரம்யா விற்கு கடந்த 1 வருடமாக உடல்நிலைசரியில்லாமல்டாக்டரிடம்சிகிச்சைபெற்று வந்தார்.

இதனால், அவர்தொடர்ந்து மனஅழுத்தத்தில் இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. இந்தநி லையில், ரம்யா நேற்று வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தனக்குத் தானேமண்ணெண்ணெய்ஊற்றிதீவைத்துக்கொண்டதா கக் கூறப்படுகிறது. இதில் உடல் முழுவதும் எரிந்த நிலையில் வீட்டினுள் இறந்து கிடந்தார். இச்சம் பவம் குறித்து கோபி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின் றனர்.

## கோவை செம்மொழிப்பூங்காவில் ஒரே நாளில் 24 ஆயிரம் பேர் குவிந்தனர்!

கோவை,டிச.24

கோவை காந்திபுரம் பகுதியில் 208.50 கோடி மதிப் பில் பல் வேறு நவீன வசதிகளு டன் செம்மொழிப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

இதனை கடந்த மாதம் 25ந்தேதிமுதல்அமைச்சர் மு.க ஸ்டாலின் திறந்து வைத்தார். தொடர்ந்து கடந்த 11 ந் தேதி முதல் பொது மக்கள் பார் வைக்கு அனுமதிக் கப்பட்டனர்,

நாள்தோறும் ஏராள மான பொது மக்கள் மற் றும் பள்ள,கல்லூரிமாண வமாணவியர்க ள் ஆர்வத்துடன் கண்டு ரசித்து வருகின்றனர்.

சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து தரப்பு மக்க ளையும் கவரும் வகை யில் பல் வேறு சிறப் பம்சங்களுடன் இந்த பூங்கா அமைக்கப்பட்டதால் நாளுக்கு நாள் பூங்காவை பார்வையிட மக்களிடையே வர வேற்பு அதிகரித்து வருகி றது.

கோவை மட்டுமின்றி பொள்ளாச்சி. மேட்டுப் பாளை யம் உள்ளிட்ட அண்டை பகுதிகளை சேர்ந்தவர்களும் அதிகள வில் வருகின்றனர், நேற்று ( ஞாயிற்றுக்கி ழமை ) விடுமுறை நாள் என்பதால் வழக்கத்தை விட கூட்டம மிகுதியாக இருந்தது, அதுவும் குடும் பம் குடும்பமாக வந்த னர், இதனால் செம்மொ ழிப் பூங்கா அருகே ஏற் பட்ட போக்கு வரத்து நெரிசலை போலீசார் சீர மைத்த னர், கடந்த1 ந் தேதி முதல் நேற்று 1,25,557 பேர் கண்டு ரசித்துள்ளனர், நேற்று மட்டும் 24,166 பேர் பூங்காவை பார்வை யிட்டனர்.



## உறக்கமின்றி பணியாற்ற வேண்டும்;காணொலி காட்சி வாயிலாக முதல்வர் ஸ்டாலின் அறிவுரை!

### அமைச்சர் கீதாஜீவன் பங்கேற்றார்!!

ஆம்பூர் டிச.24

திமுக தலைவரும் தமிழ்நாடு முதல மைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமை யில் வரைவு வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்து திமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் சென்னையிலி ருந்து காணொலி காட்சி வாயிலாக நடை பெற்றது. முகாம் அலுவலகத்திலிருந்து பேசிய தமிழக முதலமைச்சர் தமிழ்நாட் டில் 15 சதவீத வாக்காளர்களை 97 லட் சம் வாக்காளர்களை நீக்கி வரைவு வாக் காளர்பட்டியல்வெளியிட்டுள்ளார்கள். இடம் பெயர்ந்தவர்கள் என்று மட்டும் 68 லட்சம் பேரை நீக்கியிருக்கிறார்கள். எஸ்ஐஆர் பணிகளை ஆரம்பித்தபோதே இது பல்வேறு முறைகேடுகளுக்கு வழிவ குக்கும் தமிழ்நாட்டு வாக்காளர்கள் நீக் கப்பட வாய்ப்புள்ளது. என்று முன்கூட்டியே எச்சரித்திருந்தோம்.

உச்சநீதிமன்றத்திலும் வழக்கு தொடுத் திருக்கிறோம் இந்நிலையில் வெளியி டப்பட்ட பட்டியல்களை சரிபார்த்து அந்த அந்த மாவட்ட செயலாளர்கள் தகு தியான வாக்காளர்கள் யாரும் விடுப்ப டக்கூடாது என்பதில் கவனமாக இருந்து பணியாற்ற வேண்டும். இனி தான் உறக் கமின்றி முழு அசுரப்பலத்துடன் பணி யாற்ற வேண்டும். சற்று அசந்து இருந் தால் கூட களத்திற்கே வராத பாஜக அதிமுக சதிவேலைகள் ஏதோ வைத்தி ருப்பது போல் தெரிகிறது என்று கூறியது மட்டுமின்றி தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகந லன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவனிடம் மாவட்டத்திற் குட்பட்ட தூத்துக்குடி கோவில்பட்டி விளாத்திகுளம் ஆகிய 3 தொகுதிகளில் ஆற்றிய பணிகளும் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் கேட்டறிந்து விரை வாக தகுதியுள்ள அனைத்து வாக்காளர்க ளையும்புதியபடிவத்தில்விண்ணப்பித்து இணைக்க வேண்டும்.

அதே போல் புதிதாக உருவாக்கப்பட் டுள்ள வாக்குசாவடிகளுக்கும் பிஎல்ஏ 2 மற்றும் பாகமுகவர்கள் புதிதாக நியம ணம் செய்யப்பட்டு அந்த பணிகளையும் முறைப்படுத்த வேண்டும். என்று கூறி னார். பதிலுரையில் அனைத்து பணிக ளையும் முன்னெடுத்து மாநில மாவட்ட மாநகரம் ஒன்றியம் நகரம் உள்ளிட்ட நிர்வாகிகள் மட்டுமின்றி களப்பணியாற் றிகொண்டிருக்கும் பிஎல்ஏ 2 மற்றும் பாக முகவர்கள் அனைவருக்கும் தகவல் கொடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதாக அமைச்சர் கீதாஜீவன் தெரிவித்தார்.



தேனி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், வழங்கினார்.



சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில்மாவட்டஆட்சித்தலைவர்டாக்டர்இரா.பிருந்தாதேவி,மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ரவிக்குமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செண்பகவள்ளி ஆகியோர் உள்ளனர்.

## கொடைக்கானலில் மக்காசோள கதிர்களை ருசித்த காட்டெருமை!

### வலைதளங்களில் வீடியோ வைரல்!!





கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி இரண்டாவது தளத்தில் நபார்டு திட்டத்தின்கீழ், ரூ.1 கோடியே 41 இலட்சத்து 36 ஆயிரம் மதிப்பில் புதியதாக கட்டப்பட்டுள்ள 6 வகுப்பறை கட்டிடங்களில் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் .தே.மதியழகன் குத்து விளக்கு ஏற்றி வைத்தார். உடன், மாவட்ட கல்வி அலுவலர் கௌசர், உதவி செயற்பொறியாளர் பர்வீனா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### வாணியம்பாடி அருகே

## உதயேந்திரம் பேரூர் 7 வது வார்டு பகுதி திமுக சார்பில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை!



வாணியம்பாடி, டிச.24

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த உதயேந்திரம் பேரூர் 7 வது வார்டு மஜுத் தெரு பூத் எண்: 143ல் ''என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை'' நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு உதயேந்திரம் பேரூர்திமுக செயலாளர் ஆ.செல்வராஜ் தலைமை வகித்தார். அவைத் தலைவர் சி.குமார், தென்றல் தமிழரசன்,கிளை கழகச் செயலாளர்.எல்.புஷ்பா லூர்து நாதன், கிளை நிர்வாகிகள் எஸ்.எட்வின், ஏ.எஸ் சார்லஸ், ஐ.சார்லஸ், எம்.இருதயம்,

மாது ஆரோன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மாவட்ட ஆதி ஆதிதிராவிட நலக்குழு துணை அமைப்பாளர் கோ.வி. அசோகன் அனைவரையும் வரவேற்றார்.

இதில் மாவட்ட பிரதிநிதிகள் டி.அம்பலவாணன், எம்.எஸ்.மேகநாதன்,பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் வி. கோவிந்தராஜ் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர். வி.முருகன் ஆகியோர் கலந்து கொண்டு SIR பணிகள் குறித்தும், புதிய வாக்காளர்களை சேர்ப்பது குறித்தும், அரசின் சாதனைகளை பொது மக்களிடம் எடுத்து கூறினர்.

நிகழ்ச்சியில் பேரூர் கழக நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், கட்சி தொண்டர்கள், மகளிர் அணியினர் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.



### திருவெண்ணெய்நல்லூர் அருகே

## ரேஷன் அரிசி கடத்திய இரண்டு பேர் கைது; 1 டன் ரேஷன் அரிசி, மினிலாரி பறிமுதல்!

திருவெண்ணெய்நல்லூர், டிச.24

திருவெண்ணெய்நல்லூர் அருகே ரேஷன் அரிசி கடத்திய இரண்டு இளைஞர்களை போலீசார் கைது செய்து, அவர்களிடமிருந்து 1 டன் ரேஷன் அரிசி, மினி லாரியைபறிமுதல்செய்தனர்.விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே சேமங்கலம் பகுதியில் ரேஷன் அரிசி கடத்தப்படுவதாக போலீசாருக்கு கிடைத்த தகவலின் பேரில் காவல் உதவி ஆய்வாளர் அன்பழகன் உள்ளிட்ட போலீசார் சேமங்கலம் பகுதியில் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர்.

அப்போது அவ்வழியாக வந்த அசோக் லைலாண்ட் தோஸ்த் மினி லாரியை தடுத்து சோதனை செய்தனர். சோதனையில் அந்த மினி லாரியில் ரேஷன் அரிசி இருப்பது தெரியவந்தது. பின்னர் ரேஷன் அரிசியை கடத்தி வந்தவர்களிடம் விசாரணை செய்தபோது கள்ளக்குறிச்சி அருகே உள்ள சித்தலூர் கிராமத்தைச் சேர்ந்த கருப்பன் மகன் சொக்கநாதன் (19), முருகன் மகன் ஐயப்பன் (21) என்பது தெரியவந்தது. மேலும் அவர்களிடம் நடத்திய விசாரணையில் கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே மடப்பட்டு கிராமத்தில் தற்காலிகமாக தங்கி இருந்த வேலூர் பகுதியைச் சேர்ந்த சரிதா என்பவர் அரிசியை வாங்கி மடப்பட்டுக்கு எடுத்து வர சொன்னதாக கூறிய தன்பேரில் மூவர்மீதும் போலீசார்வழக்கு பதிவு செய்து, சொக்கநாதன், ஐயப்பன் இருவரையும் கைது செய்து விழுப்புரம் குடிமை பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு போலீசாரிடம் ஒப்படைத்தனர். மேலும் தலைமறைவான சரிதாவை திருவெண்ணெய்நல்லூர் போலீசார் வலை வீசி தேடி வருகின்றனர்.



கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண்.4க்குட்பட்ட கரட்டுமேடு, கந்தசாமி நகர் மாநகராட்சி ஆரம்பப்பள்ளியல் ரூ.26.00 இலட்சம் மதிப்பீட்டில், பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் , துவக்கி வைத்தார். உடன் வடக்கு மண்டல தலைவர் வே.கதிர்வேல், மாமன்ற உறுப்பினர் கதிர்வேலுசாமி, உதவி பொறியாளர் சரண்யா, சுகாதார ஆய்வாளர் லோகநாதன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்

### ஓமலூர் அருகே அரசு பள்ளியில்

## தலைமையாசிரியர் அறை முன்பு மாந்திரீக பூஜை!



ஓமலூர், டிச 24

ஓமலூரை அடுத்த காமண்டபட்டி பகுதியில் அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது. இந்த பகுதியில் ஓமலூர் மற்றும் சுற்றுவட்டார கிராமத்தைச் சேர்ந்த சுமார் 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள்கல்வி பயின்று வருகின்றனர்.

மேலும் தலைமை ஆசிரியர் உள்பட 30 பேர் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் சனி ஞாயிறு விடுமுறை முடித்து நேற்று காலை வழக்கம் போல் பள்ளி தொடங்கியது.

அப்போது பள்ளியின் தலைமை ஆசிரியர் அறை முன்பாக கருப்பு மையால் வட்டம் வரைந்து வட்டத்திற்குள் நான்கு புறமும் முக்கோணம் வருவது போல் வரைந்து குங்குமம், முட்டை உள்ளிட்ட பொருட்களை வைத்திருப்பது கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

மேலும் ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு மத்தியில் மாந்திரீக பூஜை ஏதாவது செய்யப்பட்டதா என பரபரப்பு ஏற்பட்டது.

பள்ளி வளாகத்தில் தலைமை ஆசிரியர் அறை முன்பு பூஜைக்கு படம் வரைவது போல் படம் வரைந்து அதில் குங்குமம் முட்டை வைத்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### தாரமங்கலம் அருகே

## லாரி கவிழ்ந்து விபத்து; லாரி டிரைவர் பலி!

ஓமலூர், டிச 24

தாரமங்கலம் அருகே லாரி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் டிரைவர் பரிதாபமாக பலியானார். தாரமங்கலம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். தர்மபுரி மாவட்டம், காரிமங்கலம், திண்டல் பகுதியை சேர்ந்தவர் பிருந்தா (21). இவரது கணவர் அருணாச்சலம். லாரி டிரைவராக வேலை செய்து வந்துள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு ஈரோடு பகுதியில் மக்காச்சோளம் இறக்குவதற்காக லாரியை ஓட்டிச் சென்றுள்ளார் . அப்போது தாரமங்கலத்தை அடுத்த கருத்தானூர் பிரிவு பகுதியில் நிலைதடுமாறி ரோட்டில் சென்டர் மீடியினில் மோதிய லாரி கவிழ்ந்தது. இதில் பலத்த காயம் அடைந்த டிரைவர் அருணாச்சலத்தை அக்கம் பக்கத்தினர் மீட்டு சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்துள்ளனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர் அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து பிருந்தா தாரமங்கலம் போலீசில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### நாமக்கல் நகராட்சி பகுதியில்

## ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி கோரி மனு!

### குறைதீர் கூட்டத்தில் வழங்கினர்!!



நாமக்கல்,டிச.24

நாமக்கல் மாநகராட்சி பகுதியில், ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி கேட்டு, மாவட்ட கலெக்டர் அலு வலகத்தில் நடந்த மக்கள் குறைதீர் கூட்டத்தில், ஜல்லிக்கட்டு விழா குழு வினர் மனு அளித்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது: நாமக்கல் மாநகராட் சிக்கு உட்பட்ட நல்லிபாளையத்தில், ஜல்லிக் கட்டு விழா, வரும், 2026 பிப்., 14ல் நடத்த ஊர் பொதுமக்கள் சார்பில் ஏற்பாடு செய்து வரு கிறோம். அதில், அரசு விதித் துள்ள அனைத்து பாதுகாப்பு நெறிமுறைக ளையும் முறையாக பின்பற்றி, ஜல்லிக் கட்டு நடத்த திட்டமிட் டுள்ளோம். எனவே, எங்கள் கிராமத்தில் ஜல்லிக்கட்டு நடத்த, மாவட்ட நிர்வாகம் அனு மதி வழங்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பென்னாகரம் அருகே

## பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை!

### போக்சோவில் வாலிபர் கைது!!

பென்னாகரம், டிச.24

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அருகே ப சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்த வாலிபரை அனைத்து மகளிர் போலீசார் போக்சோ சட்டத்தில் கைது செய்தனர்.

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அருகே உள்ள கிராமத்தைச் சேர்ந்த 12 வயது உள்ள சிறுமி அதே பகுதியில் உள்ள அரசு பள்ளியில் ஏழாம் வகுப்பு படித்து வருகிறார். கடந்த சனிக்கிழமை அன்று வீட்டின் அருகே தண்ணீர் பிடிக்க சென்றபோது பென்னாகரம் அருகே அண்ணா நகர் பகுதியை சேர்ந்த நவீன் குமார் வயது 26 கேலி, கிண்டல் செய்து கீழே தள்ளி பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதில் காயமடைந்த சிறுமி பென்னாகரம் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக சிறுமி அளித்த புகாரின் பேரில் பென்னாகரம் அனைத்து மகளிர் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து நவீன்குமாரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.



சேப்பாக்கம்திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேனாம்பேட்டை மண்டலம், மெரினா கடற்கரை, அண்ணா பூங்கா அருகில் சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் 86.40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட வீடற்றோருக்கான இரவுநேர காப்பகத்தினை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே. சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு140, சைதாப்பேட்டை, ஜோன்ஸ் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள தூய்மை பணியாளர்களுக்கான உணவு வழங்கும்கூடத்தினை மக்கள்நல்வாழ்வுத்அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சியில் மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் எம். ஸ்ரீதரண் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்ட விக்டோரியா பொது அரங்கினை பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கவுள்ளதைத் தொடர்ந்து, நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு விக்டோரியா பொது அரங்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.41க்குட்பட்ட பி.என்.புதூர் மாநகராட்சி பள்ளியில் மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் நேரில் சென்று பார்வையிட்டு, குழந்தைகளுடன் கலந்துரையாடினார். உடன் மேற்கு மண்டல தலைவர் கே.ஏ.தெய்வயானைதமிழ்மறை, மாமன்ற உறுப்பினர் சாந்தி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.



ஊட்டமலைஅரசுமேல்நிலைப்பள்ளியில்94.24லட்சம்மதிப்பீட்டில்கட்டிமுடிக்கப்பட்ட கூடுதல் கட்டிடத்தை முதலமைச்சர் மு .க ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.தொடர்ந்து பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே.மணி குத்துவிளக்கு ஏற்றினார். நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் பாலாஜி, உதவி தலைமை ஆசிரியர் கருணாமூர்த்தி மற்றும் பா.ம.க. மாவட்ட தலைவர் செல்வகுமார். ஒன்றிய செயலாளர் முருகன் ஆசிரியர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.